1975 ஏப்ரல் 19]

Tamil Nadu Small Industries Corporation, Vridhachalam,
Tamil Nadu Stone-ware Pipes;
Industrial Estate Vridhachalam;
Common Facilities and Works Centre, Omalur.

ஆக இவைகளை தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட் மேற்கொண்டு இந்தத் தொழில் சம்பந்தமாக விரிவான திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Manufacture of Soda Ash, etc.

*728 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government for the manufacture of Soda Ash and Ammonium chloride in the State ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) ஆம். தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற கூட்டுத் துறையில் உள்ள நிறுவனம் தூத்துக்குடியில் சோடா ஆஷ், அம்மோனியம் குளோரைடு ஆகியவற்றை தயாரிக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்தொழிற்சாலை, ஆண்டொன்றுக்கு 66,000 டன் சோடா ஆஷ், 66,000 டன் அம்மோனியம் குளோரைடு, 86,400 டன் டி. ஏ.பி., என்.பி. கே. ஆகியவற்றைத் தயாரிக்கும்.

(முற்பகல் 9-30)

திரு. என். கே. பழனிசாமி : இதற்கு மொத்த எஸ்டிமேட் எவ்வளவு ? நம் சர்க்காருடைய பங்கு எவ்வளவு போடப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டோடல் எஸ்டிமேட் 28 கோடி ரூபாய். ஃபாரின எகஸ்சேஞ்ச் ரிக்வைர்மெண்ட்ஸ் 6.5 கோடி ரூபாய். தூத்துக்குடியில் இதை அமைப்பதாகக் குறிப்பு இருக்கிறது. ஏற்கனவே அரசாங்கக் கொள்கையைத் தெரிவித்திருக்கிறேம். அந்தக் கொள்கையின்படி நேற்றுக்கூட அந்த விவரங்களைச் சொன்னேன்.